ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# தேனி மாவட்ட பெருங்கோவில்களும் விழாக்களும்

**சு.காந்திதுரை**

இணைப்பேராசிரியர் & நெறியாளர்

(பகுதிநேரம்),

தமிழ்த்துறை,

தியாகராசர் கல்லூரி,

மதுரை

**சு.தனலெட்சுமி**

முனைவர்பட்ட ஆய்வாளர்

தியாகராசர் கல்லூரி,

மதுரை

dlakshmi4148@gmail.com

## முன்னுரை

பழங்காலம் முதல் இன்றுவரை சமுதாயத்தைப் பாதுகாத்துச் செல்பவை விழாக்களாகும். இவ்விழாக்கள் மூலமாக மனிதன் மகிழ்ந்து பண்படுகிறான். இறைவனுக்குக் கேற்பவும், இடத்திற்கேற்பவும் விழாக்கள் நடத்தப்பட்டு வந்தன. பொதுவாக எல்லாக் கோயில்களிலும் திருவிழாக்கள் நடைபெறுவதற்குப் பலரும் காரணமாக இருக்கின்றார்கள். அதாவது அந்தந்த கோயிலுக்குரிய பூசாரி. அந்தந்தக் கிராமத்தில் உள்ள பெரியவர்கள், பொதுமக்கள் ஆகிய அனைவரும் ஒன்றசேர்ந்த கலந்து ஆலோசனை நடத்திய பின்னர் விழாக்கள் கொண்டாடப்படுகின்றன.

“மக்களின் வாழ்வில் சலிப்பினைப் போக்கவும், இன்பமும் மலர்ச்சியும் புத்துணர்ச்சசியும் ஏற்படுவதற்காக விழாக்கள் நடைபெற்றன என்றும் கூறப்படுகின்றது” (அ. தட்சிணாமூர்த்தி, தமிழர் நாகரிகமும் பண்பாடும், ப.307) தேனி மாவட்ட பெருங்கோவில்கள் ஒவ்வொன்றும் அக்கால மன்னர்களின் கொடைத்திறனால் ஏராளமான நிலங்களையும் செல்வத்தையும் பெற்றிருந்தன. அவற்றினால் வரும் வருமானங்களைக் கொண்டு கோயில்களில் நடைபெறும் பூசைகளுக்கும் விழாக்களும் பயன்படுத்தி வந்தனர்.

## ஆய்வு அணுகுமுறை

பெருங்கோவில்களில் நடைபெறும் விழாக்கள் தன்மைகளை உற்றுநோக்கி விளக்குவதால் விளக்கமுறைத் திறனாய்வும் (Descriptive Approach) பகுத்தாய்வதால் பகுப்புமுறைத் திறனாய்வும் (Analytical Method) இவ்வாய்வில் பின்பற்றப்படுகின்றன. கோயில் விழாக்கள் சமதாயத்தைச் சார்ந்து நிகழ்வதால் அந்தந்த சமுதாய மக்களின்

பழக்கவழக்கம் பற்றி விளக்க சமூகவியல் அணுகுமுறையும் (Social Approach) மேற்கொள்ளப்படுகின்றன.

## தமிழ் மாதங்களில் திருவிழாக்கள்

தமிழ் மாதங்களில் கொண்டாடப்படும் விழாக்கள், பண்டிகைகள், நடத்தப்பெறும் வழிபாடுகள் ஜாதி, மத பேதமின்றி எல்லோராலும் மேற்கொள்ளப்படுகின்றன.

விழாக்கள் மக்களது தெய்வ நம்பிக்கையைப் பிரதிபலிக்கின்றன.

பெருந்தெய்வத்துக்குரிய விழாவாயினும் (பங்குனி உத்திரம், வைகாசி விசாகம்) சிறுதெய்வக் கோயில்களிலும் எல்லா இனமக்களும் சேர்ந்து விழா கொண்டாடுவது நாட்டுப்புற மக்களின் கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் ஒருமைப்படுத்துகின்றன.

பழக்கவழக்கங்கள் என்ற வகைமையை ஆராயின், பல பழக்க வழக்கங்கள் நம்பிக்கையோடும், விழாக்களோடும் சடங்குகளோடும் இணைத்துக் காணப்படுகின்றன.

“பசியும் பிணியும் பகையும் நீங்கி

வசியும் வளனும் சுரக்க என வாழ்த்தி

அணிவிழா அறைந்தனன்”[2] (மணிமேகலை, ப.20)

திருவிழாவின் மூலம் மக்கள் மனம் செம்மைப்பட்டு வாழ்வில் உயர்வு காணவேண்டும். மகிழ்ச்சி நிறைந்த கருணை மலிந்த வாழ்வாக அமையவேண்டும்.

## குச்சனூர் – சுயம்பு சனீஸ்ர பகவான் திருக்கோயில் விழாக்கள்

ஒவ்வொரு வருடமும் ஆடிமாதம் நடைபெறும் திருவிழாக் காலங்களின் போது பூசைகள் விடியற்காலம், உச்சிகாலம், சாயங்காலம் ஆகிய மூன்று வேளைகளிலும் நாள்தோறும் தவறாமல் பூசை நடைபெறும். ஆகமமுறைப்படி தூப தீப, தாரிகைகளுடன் அர்ச்சனை முதலியனவும் நடைபெறுகின்றன.

ஒவ்வொரு ஆண்டு ஆடிமாதம் நடைபெறும் திருவிழா முக்கியமானது. ஆடிமாதம் சனிக்கிழமை தோறும் திருவிழா நடைபெறும் சுற்றுப்புறத்தில் உள்ள அனைத்து கிராம மக்கள் மற்றும் வெகுதூரத்திலிருந்து பக்தர்கள் கூட்டும் கூட்டமாக வந்து சனீஸ்வர பகவானைத் தரிசித்து செல்லும் காட்சி மக்களிடம் சமூக ஒற்றுமை ஏற்படுத்துகின்றன.

ஐந்து சனிக்கிழமைகளிலும் மூன்றாம் சனிக்கிழமையே மிகவும் விசேசமானது. அன்றுதான் திருவிழாவின் உச்சக்கட்டம் என்று சொல்லலாம். ஆண்டுதோறும் ஆடிமாதம் முதல் சனிக்கிழமையன்று கலப்பணம் கழித்து சுத்தநீர் தெளித்து காகம் பொறித்த கொடியேற்றத்துடன் விழா துவங்குகின்றன.

திருவிழா தொடங்கும் அன்றைய தினம் குச்சனூருக்கு கீழ்ப்புறமுள்ள பூலானந்தபுரம் கம்பளத்தார் கோடாங்கி நாயக்கர் வகையறாவினால் பரம்பரையாகச் செய்யப்பட்டு வந்த சாஸ்திர சடங்குகள் செய்யப்பட்டு விழாக்கள் தொடங்குகின்றன.

உத்தமபாளையம்: திருக்காளாத்தீஸ்வரர் ஞானாம்பிகைக் கோயில் விழாக்கள்

இக்கோயிலுக்கு திருவிழாவின் போது வருகை தரும் சுற்று வட்டார கிராமப் பொதுமக்கள் வண்டி அமர்த்தி வந்து சுவாமி தரிசனம் செய்துவிட்டு, கோயில் பிரகாரங்களிலேயே அமர்ந்து உண்டு, ஓய்வெடுப்பர். அதன்பின் இத்திருக்கோயிலுக்கு எதிரே தெற்கேயிருந்து வடக்கு நோக்கு ஓடிக் கொண்டிருக்கும் புண்ணிய நதியான சுரபி நதியல் நீராடிச் செல்வர். இந்நிகழ்வை இன்றும் நாம் கண்கூடாகப் பார்க்கலாம்.

“திருவிழாக்களின்போது சந்தை (Fair) கடைகள் போடப்படுவதையும் காண்கிறோம். நாட்டுப்புறத் தெய்வ வழிபாடு மக்களின் எண்ணங்களையும் நம்பிக்கையையும் வழிபாட்டு முறைகளையும் தொன்மை சமயத்தில் கூறுகளாக அமைகின்றன” (சு.சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, ப.234).

இக்கோவில் திருவிழாவில் உத்தமபாளையம் சிவனை மாப்பிள்ளையாகவும் கோயில்புரம் என்று குறிக்கப்படும் கோகிலாபுரத்தை பெண்வீட்டார் என்றும் இன்றும் அழைக்கின்றனர்.

கோகிலாபுரம் அம்மன் பிறந்த கிராமமாக கருதப்படுவதால் இன்றளவும் அவ்வூர்காரர்கள் பெண்வீட்டார் என்ற முறையில் திருக்கோவிலில் அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு நன்கொடைகள் வழங்கி விழாவினை சிறப்பாக நடத்தி மகிழ்கின்றனர்.

பங்குனி உத்திரம் தினத்தன்று இக்கோயிலில் ஆறுமுகராய், பன்னிரு கரங்களுடன் வீற்றிருக்கும் சண்முகப் பெருமானுக்கு பால்குடம் மற்றும் சிறப்பு அபிசேகம் செய்து விழாக்கள் நடத்தப்படுகின்றன.

## இராகு – கேது பெயர்ச்சி விழா:

இக்கோவில் இராகு –கேது ஸ்தலமாக கருதப்படுகிறது. இராகு-கேது பகவான் ஒரு ராசியிலிருந்து மற்றொரு ராசிக்குப் பின்னோக்கி ஒன்றறை ஆண்டுகளுக்கு ஒருமுறை

பெயர்ச்சி அடையும் தினத்தன்று, பெயர்ச்சி நாழிகையின் பொழுது இக்கோயிலில் இராகு பகவானுக்கும், கேது பகவானுக்கும் சிறப்பு வழிபாடு நடத்தப்படுகிறது. அச்சமயம் ஆயிரக்கணக்கான பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று சாமி தரிசனம் செய்யும் காட்சி சமூக ஒற்றுமையை நிலைநாட்டுவதாய் உள்ளது.

## ஆண்டிபட்டி மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவில் விழாக்கள்

இக்கோயிலில் சித்திரை மாதம் மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவில் விழாவைப் போன்றே இங்கும் சிறப்பாக நடைபெறுகின்றன. இம்மாதங்களில் மீனாட்சி திருக்கல்யாணம் நிகழ்ச்சியில் பக்தர்கள் அனைவரும் கலந்து கொண்டு இறைவனை தரிசனம் செய்கின்றனர்.

விழாவின் முக்கிய நிகழ்ச்சியான திருக்கல்யாண நிகழ்ச்சி திருவிழாவின் 12ஆம் நாள் நிகழ்ச்சியாக நடைபெறுகிறது. இத்திருக்கல்யாண நிகழ்ச்சியில் கோவிலைச் சுற்றியுள்ள அனைத்து கிராம மக்களும் கலந்து கொள்ளப்படுகின்றன.

இவ்விழா அரசு மற்றும் பொதுமக்கள் இணைந்து நடத்தும் விழாவாகும். விழாவின் போது பக்தர்கள் பால்குடம் நெய்வேத்தியம், துப தூபம், பொங்கல் இவற்றை செலுத்துகின்றனர்.

திருவிழாக் காலத்தில் இறைவனும் இறைவியும் திருமண கோலத்தில் உள்ள சுவாமியை பழைய திருக்கல்யாண மண்டபத்தில் சுபமுகூர்த்த நிகழ்ச்சியில் பக்தர்கள் தரிசிக்கலாம். திருக்கல்யாண நிகழ்ச்சிக்கு அடுத்தநாள் திருத்தேரோட்டம் நடைபெறுகிறது.

சமயத்தில் உண்மையான மாற்றம் என்பது ஓர் சமய நெறியின்று இன்னொரு சமயநெறிக்கு இறைவனைப் பற்றிய கருத்தில் தாழ்வான நிலையிலிருந்து உயர்வான கருத்து நிலைக்கு வளர்கின்ற நிலை மாற்றமே உண்மையான மாற்றம். பண்பட்ட நிலைக்கு வளர்வதே மெய்யான ஆன்மீக வளர்ச்சியாகும். வழிபாட்டுச் சூழலில் இறைவனைப் பற்றி உயர்வான முறையில் சிந்திக்க வளர்வதே ஆன்மீகக் குறிக்கோளாகும்”[4] (எம்.ஆர்.ரகுநாதன், இந்துமதத் தத்துவங்களும் இந்துமதச் சடங்குகளும், ப.7)

## பெரியகுளம் கைலாசபட்டி – கைலாசநாதர் கோவில் விழாக்கள்

இக்கோயில் சுமார் 1800 ஆண்டுகளுக்கு முன்னால் மன்னர்களால் கட்டப்பட்ட கோவிலாகும். இக்கோவில் மேற்கோ உள்ள மேற்கு தொடர்ச்சிமலை கைலாசநாதர் மேலைக்கு திருவாச்சி போன்று அமைந்திருக்கின்றன.

### விழாக்கள்

கார்த்திகை மகாதீபம்

பௌர்ணமி கிரிவலம்

ஆடி அமாவாசை

பிரதோசம்

இக்கோவிலில் கார்த்திகை விளக்கிட்டு விழா குடும்ப விழாவாகவும், மாநில விழாவாகவும் கொண்டாடப்படுகின்றது. திருவாதிரை திருவிழாவைப் பெண்கள் கொண்டாடும் விழா என்றும் விரதத்தோடு தொடர்புடைய விழா என்றும் வகைப்படுத்தலாம்.

திருமணம் ஆகாத பெண்கள் செய்யவேண்டிய பூஜையாகும். பன்னிரண்டு, இருபத்திரெண்டு அல்லது நாற்பத்தெட்டு தினங்கள் என்று முதலில் சங்கல்பம் செய்து கொண்டு பக்தி சிரத்தையுடன் கௌரி பூஜை எனப்படும் குத்துவிளக்கு பூஜை அனுஷ்டிப்பதால் கண்டிப்பாக திருமணம் நிச்சயமாக நல்லமண வாழ்க்கை அமைவது திண்ணமாகும்.

## ஆடி அமாவாசை விழா

ஆடிமாதம் கோடை வரும்போது சூரியன் வடக்கிலிருந்து தெற்கு நோக்கிப் பயணம் தொடருவார் உத்திராயன புண்ணியகாலம் முடிந்து தட்சிணாயண புண்ணிய காலத்தின் ஆரம்பமாகும்.

“ஆடி மாதம் பூரநட்சத்திரம் உமாதேவிக்கு விசேஷமான தினம். உலக மக்களை காக்க சக்தி இவ்வுலகில் திருத்தோற்றம் அளித்தது. ஆடிப்பூரம் நன்னாளில்தான் ஆடிப்பூரம் வெள்ளிக்கிழமை அன்று வருவது சிறப்பாகும்.”[5] (எம்.ஆர்.ரகுநாதன், இந்துமதத் தத்துவங்களும் இந்துமதச் சடங்குகளும், ப.54).

## தேனி வேதபுரி கோவில் விழாக்கள்

இக்கோயிலில் பூசை நேரங்களில் மட்டுமே தேங்காய் உடைக்கும் விதி பின்பற்றப்படுகிறது. மேலும் தட்சிணாமூர்த்திக்கு கொண்டைக்கடலை பொட்டலமாக சமர்ப்பிக்கும்படி பக்தர்கள் கோயில் நிர்வாகத்தினரால் அறிவுறுத்துப்பட்டுள்ளனர்.

வியாழக்கிழமை தோறும் இக்கோவிலில் தட்சிணாமூர்த்திக்கு பக்தர்கள் அதிகளவில் வந்து வழிபடுகின்றனர்.

“பூமி, நீர், நெருப்பு, ஆகாசம், சூரியன், சக்திரன், யஜமானன் என்ற அஷ்டமூர்த்திகளாகவும் அசையும் பொருள்களாகவும், அசையாத பொருள்களாகவும் எவர் பிரகாசிக்கிறாரோ, அறிந்தவருக்கு எவரைக் காட்டிலும் மிகவும் சிறந்த பொருள் கிடையாதோ,

அந்த குருமூத்தியான ஸ்ரீ தட்சிணாமூர்த்தியை வணங்குகிறேன்”6 (பாலாஜி, சௌ., செந்தில்குமார், சிவபெருமான் வழிபாடு, ப.38).

விழாக் காலங்களில் பக்தர்கள் அனைவரும் ஒற்றுமையாக இறைவனின் அபிசேக ஆராதனைகளைக் கண்டு மகிழ்கின்றனர்.

### உத்தமபாளையம் யோக நரசிங்கப் பெருமாள் கோவில் விழாக்கள்

இக்கோவில் திருவிழாவிற்கு முக்கிய வருவாய் நஞ்சை புஞ்சை குத்தகை, டிக்கெட் விற்பனை, உண்டியல் வருமானம், கட்டிடம் மற்றும் குடியிருப்பு வீடுகளில் இருந்து கிடைக்கும் வாடகை மூலம் நடத்தப்பட்டு வருகின்றன.

இக்கோவில் குடமுழுக்கு விழா நடைபெற்று நீண்ட பல வருடங்கள் ஆகிவிட்ட நிலையில் மீண்டும் திருப்பணி வேலைகள் தொடங்கி குடமுழுக்கு செய்திட இந்து சமய அறநிலையத் துறை இணை ஆணையர் அவர்களின் மேலான உத்தரவுப்படி திருப்பணி கமிட்டி அமைக்கப்பட்டு திருப்பணி வேலைகள் துவங்கப்பெற்றன.

இப்பணி முடிந்தவுடன் குடமுழுக்கு திருவிழா மிகச் சிறப்பாக ஆட்சியர், அறநிலையத்துறை, ஊர் பொதுமக்கள் கோவில் நிர்வாகிகள் மூலமாக இவ்விழா சிறப்பாக நடைபெறும்.

### கூடலூர் அழகர் சுந்தரராஜப் பெருமாள் – சுந்தரவள்ளித் தாயார் விழாக்கள்

கூடலூரைப் பற்றிக் கோவையாகத் தமிழால் ‘கலியன்’ என்னும் பேருடைய நான் பயபக்தியோடு பாடியுள்ளேன். இப்பாசுரங்களை பாடினால், பாவங்கள் எல்லாம் பறந்து போகும் என்று ஒவ்வொரு விழாவும் பக்தர்கள் நல்லருள் கைகூடுமென்று வழிபட்டு வருகின்றன.

இக்கோவிலில் சித்ரா பவுர்ணமியன்று ஒருநாள் சுவாமிக்கு விழா கொண்டாடப்படுகின்றன. அன்று சுவாமிக்கு விசேஷ திருமஞ்சனம், பூசைகள் நடக்கும். இரவில் உற்சவர் வீதியுலா என்று பக்தர்களின் மனதில் இன்பம் பொங்கச் செய்கின்றனர். மறுநாள் அதிகாலையில் கோயிலுக்குத் திரும்புவார். சுவாமி சன்னதி எதிரில் கல் தீப ஸ்தம்பம் காட்டி பொதுமக்கள் விழாக்களை ஒற்றுமையுடன கண்டுகளிக்கின்றனர்.

“இத்திருவிழாவன்று பெரியவர்கள் ஒன்றுகூடி தேர்த்திருவிழா நடத்த வேண்டுமென முடிவு செய்கின்றனர். ஒவ்வொரு நாளும் தெருவாரியாக திருவிழா நடைபெறுகிறது.

அப்போது தெய்வங்கள் வீதி உலா வருகின்றன" (முனைவர் ஓ.முத்தையா, இயற்கைசார் பண்பாடு, ப.230).

விழாக்களின் மூலம் உறவுகளைச் சந்திக்கவும் அவர்களை அழைத்து விருந்து படைப்பதும் விநோதங்களும் கட்டுப்பாடுகளையும் பின்பற்றும் நோக்கில் அமைகின்றன.

தேர் என்பது உற்சவ மூர்த்தியை வைத்து நீண்ட வக்கயிற்றைக் கொண்டு இழுத்துச் செலலப்படும் கோபுரம் போன்ற மேல் அமைப்பையும் பெரிய சக்கரங்களையும் கொண்ட கோயில் வாகனம் என விளக்கம் தருகிறது. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி.

*"தேரும் யானையும் குதிரையும் பிறகும்*

*ஊர்ந்தனர் இயங்கலும் உரியர் என்பர்"[8]          (ப.சிதம்பரம் 'முதல்வன்', ப.67)*

என்று குறிப்பிடுகிறார். வெற்றிபெற்ற மன்னனை வாழ்த்தி முன்தேர்க் குரவை பின்தோக் குரவை ஆகியவற்றை நிகழ்த்தியதாகக் குறிப்பிடுகின்றன.

விழாக் காலங்களில் திருமாலுக்கு நாள் முழுவதும் உண்ணாமல் விரதம் இருந்து கோயிலுக்குச் சென்று வழிபட்டு, பின்னர் சொர்க்க வாசல் வழி நுழைந்து நாட்டுப்புற மக்கள் வீடு திரும்புகின்றனர். மறுநாள் அதிகாலையில் இருபத்தோரு காய்கறிகளோடு வடை, பாயாசம் செய்து திருமாலுக்கு படையலிட்டு பக்தர்கள் வழிபடுகின்றன.

## முடிவுரை

பெருங்கோவில் திருவிழாக்களின் ஏற்படும் சமூக ஒற்றுமைகள், விழாவின்போது பொதுமக்கள் கலந்துகொள்ளும் பண்பாடுகளும், சமூக நாகரிகமும் காணப்படுகின்றன. திருவிழாவின் போது கோவிலின் நிலங்கள் வாயிலாக வரும் வருமானம் மற்றும் கடைகள், வீடுகள், பக்தர்கள் சீட்டு வசூல் அரசு மானியங்களைக் கொண்டு விழா ஒற்றுமையாகக் கொண்டாடப்படுகின்றன.

## குறிப்புகள்

1. அ.தட்சிணாமூர்த்தி, தமிழர் நாகரிகமும் பண்பாடும், ப.307
2. புலியூர் கேசிகன், மணிமேகலை, ப.29.
3. மேலது, ப.16
4. டாக்டர் சு.சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, ப.234.
5. எம்.ஆர்.இரகுநாதன், இந்துமதத் தத்துவங்களும், இந்துமதச் சடங்குகளும், ப.7.

6. மேலது., ப.54.
7. பாலாஜி சௌ.செந்தில்குமார் ஸ்ரீ தட்சிணாமூர்த்தி வழிபாடு, ப.38.
8. முனைவர் ஓ.முத்தையா, இயற்கைசார் பண்பாடு, ப.230.
9. சி.சிதம்பரம், ‘முதல்வன்’, ப.67.

**பயன்பட்ட நூல்கள்**


1. அ.தட்சிணாமூர்த்தி, தமிழர் நாகரிகமும் பண்பாடும், வெற்றிச் செல்வி வெளியீட்டகம், தஞ்சாவூர், 1973.
2. புலியூர் கேசிகன், மணிமேகலை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், திருநெல்வேலி, முதற்பதிப்பு, ஜூலை, 1946.
3. சு.சண்முகசுந்தரம், நாட்டுப்புற இயல், காவ்யா, சென்னை, இரண்டாம் பதிப்பு, ஏப்ரல் 2007.
4. டாக்டர் சு.சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
5. எம்.ஆர்.ரகுநாதன், இந்துமதத் தத்துவங்களும் இந்துமதச் சடங்குகளும், சென்னை.
6. பாலாஜி சௌ. செந்தில்குமார், சிவபெருமான் வழிபாடு, பாலாஜி பதிப்பகம், கும்பகோணம்.
7. முனைவர் ஓ.முத்தையா, இயற்கைசார் பண்பாடு, சென்னை, 2018.
8. சி.சிதம்பரம், முதல்வன், காரைக்குடி.